மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.03/2021
அ.வ.எண்.205/2015

மாரியப்பன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. முனியப்பன்
2. சுசீலா
3. சதீஷ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 11.02.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கே.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் பிரிவு 151ன் கீழ் சூரப்பள்ளி கிராம பஞ்சாயத்து தலைவரை மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

சூரப்பள்ளி கிராம பஞ்சாயத்து தலைவரை மனுதாரர் குடியிருக்கும் வீட்டின் கதவு எண்.7–30 ச.எண்.252/5ல் உள்ளது குறித்தும், அது கூரையாக இருந்து அதை அகற்றி வில்லை வீடு கட்டி மனுதாரர் குடியிருந்து வரி செலுத்தி வருவது குறித்தும் சாட்சியமளிக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி சாட்சியம் மனுதாரர்/வாதியின் வழக்கை நிரூபிக்க மிக முக்கியமான ஒன்றாகும். எனவே சூரப்பள்ளி கிராம பஞ்சாயத்து தலைவரை மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 1ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2, 3ம்எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் எதிர்வாதமே ச.எண்.252/2ல் மனுதாரர் கூறும் க.எண்.7/30 வீடு இல்லை என்பது தான். சூரப்பள்ளி கிராம பஞ்சாயத்து தலைவர் வீட்டுவரி கொடுப்பவர் தான். ஆனால் எந்த சர்வே எண்ணில் வீடு உள்ளது என்று கூறுவதற்கு அவர் வருவாய் துறையை சார்ந்தவர் அல்ல. வருவாய் துறையை சார்ந்தவர்கள் தான் சர்வே எண்ணை பற்றி குறிப்பிட முடியும். ஆதலால் சர்வே எண்.252/5ல் வீடு உள்ளதா, இல்லையா என கூற பஞ்சாயத்து தலைவருக்கு அதிகாரம் இல்லை. ச.எண்.252/5க்கு பஞ்சாயத்து அலுவலகத்தில் ஆவணம் ஏதும் உள்ளதா என்று தான் விசாரணை செய்ய முடியும் அறுதியிட்டு சர்வே எண்.252/5ல் தான் வீடு உள்ளது என்று பஞ்சாயத்து தலைவரால் சொல்ல முடியாது என்பதால் பஞ்சாயத்து தலைவரை விசாரிப்பது உகந்தது இல்லை. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்/வாதி தரப்பில் சூரப்பள்ளி கிராம பஞ்சாயத்து தலைவரை மனுதாரர் குடியிருக்கும் வீட்டின் கதவு எண்.7–30 ச.எண்.252/5ல் உள்ளது குறித்தும், அது கூரையாக இருந்து அதை அகற்றி வில்லை வீடு கட்டி மனுதாரர் குடியிருந்து வரி செலுத்தி வருவது குறித்தும் சாட்சியமளிக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார் எனவும், மேற்படி சாட்சியம் மனுதாரர்/வாதியின் வழக்கை நிரூபிக்க மிக

முக்கியமான ஒன்று எனவும், எனவே சூரப்பள்ளி கிராம பஞ்சாயத்து தலைவரை மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் எதிர்வாதமே ச.எண்.252/2ல் மனுதாரர் கூறும் க.எண்.7/30 வீடு இல்லை என்பது தான் எனவும், சூரப்பள்ளி கிராம பஞ்சாயத்து தலைவர் வீட்டுவரி கொடுப்பவர் தான் எனவும், ஆனால் எந்த சர்வே எண்ணில் வீடு உள்ளது என்று கூறுவதற்கு அவர் வருவாய் துறையை சார்ந்தவர் அல்ல எனவும், வருவாய் துறையை சார்ந்தவர்கள் தான் சர்வே எண்ணை மாற்றி குறிப்பிட முடியும் எனவும், ஆதலால் சர்வே எண்.252/5ல் வீடு உள்ளதா, இல்லையா என கூற பஞ்சாயத்து தலைவருக்கு அதிகாரம் இல்லை எனவும், ச.எண்.252/5க்கு பஞ்சாயத்து அலுவலகத்தில் ஆவணம் ஏதும் உள்ளதா என்று தான் விசாரணை செய்ய முடியும் எனவும், அறுதியிட்டு சர்வே எண்.252/5ல் தான் வீடு உள்ளது என்று பஞ்சாயத்து தலைவரால் சொல்ல முடியாது என்பதால் பஞ்சாயத்து தலைவரை விசாரிப்பது உகந்தது இல்லை எனவும், எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் இவ்வழக்கானது மனுதாரர்/வாதி தரப்பில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது மனுதாரர்/வாதியின் சுவாதீனத்தை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. மனுதாரர் தரப்பில் வழக்கு ச.எண்.252/5ல் வீடு உள்ளது எனவும், அதற்கான வீட்டுவரி ரசீது வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கு ச.எண்.252/5ல் மனுதாரர்/வாதி கோரும் வீடு இல்லை என கட்சி செய்தபோதும், எதிர்வழக்குரை பத்தி 6ல் மனுதாரர்/வாதியின் வீட்டிற்கு வரிவிதிக்கப்பட்டதாக கூறுவது பொய் என கட்சி செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே மேற்படி வீட்டுவரி ரசீதுகள் சூரப்பள்ளி கிராம தலைவரால் வழங்கப்பட்டுள்ளதா

என்பது குறித்து சூரப்பள்ளி கிராம தலைவர் அளிக்கும் சாட்சியமானது இவ்வழக்கினை தீர்மானிக்க உதவும் என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்பட்டும், அவரவர் செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S PRINCE SAMUVEL RAJ Digitally signed by S PRINCE SAMUVEL RAJ Date: 2022.02.15 17:55:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

S PRINCE SAMUVEL RAJ Digitally signed by S PRINCE SAMUVEL RAJ Date: 2022.02.15 17:56:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.